உ

சிவமயம்.

ஆசார விளக்கம்.

இஃது

திரிசிரபுரம் வரகனேரி உபாத்தியாயர்

கு. சோமசுந்தரம்பிள்ளை யவர்களால்

இயற்றப்பெற்று

முத்துராஜ மகாஜன சங்கத்தாரால்

பதிப்பிக்கப்பெற்றது.

THE WEDNESDAY REVIEW PRESS,

TRICHINOPOLY.

—

1910.

Price As 2. *Copyright Registered.* விலை அணா. 2

உ

சிவமயம்.

ஆசார விளக்கம்.

758

இஃது

திரிசிரபுரம் வரகனேரி உபாத்தியாயர்

கு. சோமசுந்தரம்பிள்ளை யவர்களால்

இயற்றப்பெற்று

முத்துராஜ மகாஜன சங்கத்தாரால்

பதிப்பிக்கப்பெற்றது.

WEDNESDAY REVIEW PRESS,

TRICHINOPOLY.

1910.

Copyright Registered.

170 BJ
60

உ

கலைமகள் துணை.

பதிப்புரை.

ஆசாரத்தைப் பற்றிச் சிறப்பாய்க் கூறும் நூல்கள் ஒன்றிரண்டே உள்ளன. அவையும் கற்றோரன்றி ஏனையோர்க்குப் பயன்படா திருத்தலால், பள்ளிக்கூடத்துச் சிறுவர்களும் சிறுமிகளும் கூட எளிதில் உணரும் படிததான செய்யுள் நடையில் ஒரு நூல் செய்யும்படி வர்க்கமேனரி உபாத்தியாயர் ம. ள. ள. ஸ்ரீ கு. சோமசுந்தரம் பிள்ளை அவர்களை வேண்ட, அன்னோர் பரோபகாரார்த்தமாய்த் தமது சிரமத்தையும் நோக்காது ஆசார விளக்கம் எனனும் இந்நூலை இயற்றிக்கொடுக்க நாங்கள் அச்சிட்டு 22-5-1910உயில் உத்தமசேரியில் எங்களுடைய முத்துராஜ மகாஜன சங்கத்தின் மூன்றும் வருஷப் பொதுக் கூட்டத்தில், ஷ கூட்டத்தின் சபாநாயகராகிய காட்டுப்புத்தூர் மிராசுதார் மகா-ள-ள-ஸ்ரீ, பெருமாள் ராஜு அவர்கள் முன்னிலையில் வெளிப்படுத்தினோம். இந்நூலில் துயிலெழுதல், ஸ்நானம் செய்தல், உண்ணல், உடுத்தல், நித்திரை புரிதல், பெரியோர் சிறியோர் அரசர் முதலினோரோடு பழகுதல் முதலிய விஷயங்களைப்பற்றிய விதிகளும் நீதிகள் பலவும் கூறப்பட்டுள்ளன. இவைகள் அனைத்தும் வேதசாரங்களாயுள்ளன என்றும் இவைகளைச் சரிவரக் கைக்கொண்டால் அறம்பொருள் இன்பம் வீடு ஆகிய புருஷார்த்தங்கள் நான்கினையும் ஒருங்கே பெறலாம் என்றும் துணிந்து சொல்லலாம். இந்நூல் பெருவாயின் முள்ளியார் அருளிச்செய்த ஆசாரக் கோவைக்குச் சார்புநூல். சிற்சில விடங்களில் "பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவலகால வகையி னானே" என்னும் இலக்கணத்தை அநுசரித்துள்ளது.

தி. சி. பரங்கிரிவேல்,

22—5—1910. முத்துராஜ மகாஜன சங்கத்தலைவர்.

உ

சிவமயம்.

முருகக்கடவுள் துணை.

———o———

சிறப்புப் பாயிரம்.

ஸ்ரீரங்கம், ஹைஸ்கூல் தமிழ்ப்பண்டிதரும் வித்வானுமாகிய

ஸ்ரீமத் குரு. சுப்பிரமணிய ஐயர் அவர்கள்

இயற்றியது.

———

நேரிசை யாசிரியப்பா.

பூதலத் துயிர்கள் காதலித் திடுதல்
அறம்பொரு ளின்பந் திறம்பெறு வீடென
நாற்பொருட் பெயரே வேற்புடை யவற்றுள்
ஒன்றே தன்னுட னின்றமூன் றினையுந்
தந்திட வல்லது நிந்தையி லறமா
மவ்வறந் தானுஞ் செவ்விசேர் வகையா
லில்லறந் துறவற மெனவிரண் டாகி
விரிக்கிற் பலவா யுரைக்கப் படினு
மொழுக்க மென்ற சழக்கறு மொன்றைக்
கைக்கொள வவையெலாம் புக்கிடுந் திறத்தை
யோர்ந்தவ் வொழுக்கினைத் தேர்ந்திட யாரும்
நூலொன் றியற்றியெம் பாலின்று தருகென
மெத்துயல் புகழ்சேர் முத்து ராச
மகாசன சங்கத் திகாதமர் மாந்தர்
வேண்மட வந்த வேண்டுகோட் கிணங்கிச்
சங்கந் தமர்ந்தெழில் பொங்குகீழ்க் கணக்கினு
ளொன்றென முள்ளியார் தொன்றியற் றியநல்
லொழுக்கம் புகன்றிடு மிழுக்கறு பனுவலின்
வழிநூ லாக வெழில்பல துன்னத்

தெள்ளிய நடையி லொள்ளிய தீந்தமிழ்ச்
சூதகிரப் பாவரல் யாத்தொரா சார
விளங்கமென் றுரைக்குந் துளக்கமி னூலை
யளத்தன னன்கு களித்தவன் யாரெனிற்
திரிசிர புரத்தை விரசுமொர் பதியாம்
அரகர முழக்கரு வரகனே ரிக்கட்
டாளாண்மை செய்யும் வேளாள குலமாஞ்
சலநிதி தந்தவொண் கலைமணி தருக்கவிக்
கேற்பநற் குழந்தை வேற்பெயர் புனையுங்
கனந்தரு தரளந் தனந்தரு தருகுண
வாரிதி தமிழ்க்கலை சீரிதென் றுணர்ந்தோன்
மெய்வரு மொழிபுகழ் சைவ சிகாமணி
சிவனடி யார்பதந் திவளுபொன் முடியன்
றைவிக மிக்க சைவசித் தாந்தக்

கடல்படி களப மடல்தொழு சிங்கஞ்
சோமசுந் தரநா மங்கொள்
பலர்புகழ்ந் தேத்துநற் செல்வ ரேறே.

சிறப்புப்பாயிர முடிந்தது.

உ

சிவமயம்.

முருகக்கடவுள் துணை.

சாத்துகவிகள்.

—o—

திரிசிரபுரம், எஸ். பி. ஜி. காலேஜ்
மாஜித் தமிழ்ப் பண்டிதர்,
சோடசத் துவயாவதானம்,
மகா-ா-ா-ஸ்ரீ

அ. இராமலிங்கம் பிள்ளையவர்கள்,

இயற்றியது.

THE REGISTRAR OF … REGISTERED 28 JUN 1910 MADRAS.

நேரிசை யாசிரியப்பா.

பூமகள் பாமகள் பொருந்திவாழ் நாடு
காமரு பொன்னியாங் காவிரி நாடு
விண்ணாடு போலப் பிறர் பொருள் வெஃகாக்
கண்ணார் நிலத்திற் கவின்பெறு நாடு
மூன்று தென்னியன் முறைப்படி யீசனை
மூன்று காலத்தும் மொய்ம்மலர் தூவித்
தணிந்து பரசித் தன்பெயர் நிறீஇய
அணிகெழு சிரபுரத் தமைந்த மாணவர்
முத்தர சன்குல மூதறி வுடையர்
உத்தமத் தங்குல முலகிடை யோங்கிடப்
பேணுங் கயத்தூர்ப் பெருவாயின் முள்ளியார்
தாணுவி னருள்கொடு சாற்றுசா ரத்தொகை
யாருந் தெரிய வணிந்து தருகெனக்
கங்கையங் குலத்துக் கவினுறு குழந்தை
வேலெனும் ஆசான் விகசித மைந்தன்
பாவல ருவக்கும் பண்புறு வல்லவன்
சோமசுந் தரப்பெயர் துன்னிய புலவன்
சொற்றன னெளிய நடைதழீஇ
இம்பர்வாழ் மாந்தர்க்கள் இசைபெற் றுயரவே.

திரிசிரபுரம் வரகனேரி

தோல்ஷாப்பு மகா-ள-ள-ஸ்ரீ

தி. ம. பொன்னுச்சாமி பிள்ளையவர்கள்

இயற்றியது.

அறுசீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்

(1) ஆசாரக் கோவையெனு மொருநூலைச் சங்கத்தா
ரளித்து மிந்தத்

தேசாபி மானிகட்கு விளங்காது கிடந்தமையாற்
சிறுருங் கொள்ள

நேசாநு கூலனெனுஞ் சோமசுந்த்ரப்பெயர்கொ
ணிபுண னின்று

ஆசார விளக்கமெனு மொருநூலாச் செய்துலகோர்க்
களித்தானம்பா

(2) அந்நூலை யுலகின்க ணிலைநாட்ட வாசார மதிக
மோங்கப்

பன்னூலும் பழகுறுநன் முத்தரைய சங்கமெனும்
பழமையோர்கள்

என்றாலு மிந்நாலுக் கிணையிலையென் றறிந்துமனத் தின்
பங்கொள்ள

நன்னூலா யச்சியற்றித் தந்தனர்க ளதன் பெருமை
நவிலற் பாற்றே.

இந்நூலாசிரியர் மாணாக்கரு ளொருவராகிய

திரிசிரபுரம்

சோ. வீரபத்திர பிள்ளை

இயற்றியது.

REGISTRAR OF ... REGISTERED 28 JUN 1910

இணைக்குற ளாசிரியப்பா.

திங்களும் புனலும் பொங்குவெண் சடிலத்
திறைபதத் துணையிரண் டறக்கலந் திழுமென
லோவா வின்ப மேவா வாழ்நெறிக்
கின்றி யமையா வியல்புடைத் தென்பச்
செந்நெறித் தாய சிறந்தவா சாரம்

அஃதே
உலகியற் பலர்க்கு முரித்தென கெழீஇ
முன்னூல் வழிநூ லாயிரு பகுப்பா
முன்னோர் முறைப்பட நன்னர் வகுத்தனர்
எனினு மவையே
ஐந்திரந் நுழைந்தபல் காப்பிய நிறைந்த
செந்நாப் புலமைச் சீர்த்த வறிவினர்க்
கன்றியின் றெளிதுணர் தருநிலை மைத்தே
அப்பெருந் துறையை
யரிறப் நாடி யணிபெற வியற்றும்
ஆர்வமீக் கொளீஇ யமர்ந்ததன் னுளத்தைச்
சித்திரப் பாதவ மருஉஞ் சிரபுர
முத்தரை யமகா கழகத் தொன்னெறி
மாக்கள் வேண்டுகோள் வெளிப்பட வுந்திய
அரிய பெரிய காரணத் தானே
கனுனுமா சார விளக்கம் புகன்றனன்
அவன்யா ரென்னிற்
றேத்துளி பிலிற்றும் பூப்பொலி கருங்குழன்
மடமானோக்கியர் மயல்வலைப் பட்டே
அறநெறி வழீஇ
மறநெறி தழீஇக்

குலாலன் றிகிரிபோற் கொடும்பவத் தாழ்குபு
நலிதரு பேதைமார் நலம்பெற வுணர்ந்துஞ்
சைவசித் தாந்தத் தனிப் பெருமரபின்
மெய்கண்ட தேவன் விரிதமிழ்ச் சமுத்திரம்

அஃதான்று
கல்லாப் புல்லறி வாளர்த மவைக்கண்
டலைநிரீஇ வைகிய மாலூன் மாந்து
கருணையில் வன்மைக் கன்னிகர் வஞ்சக்
கள்வனே னெனையுங் கழன்மலர்ப் படுத்தி
விழுத்தகு மெழுத்தறி வித்தவிறைவன்

அஃதான்று
சோலைவாய் மிளிருமாலவாய் நகர்வயின்
அரசிய னடாத்திய வங்[illegible] மூன்றுடைப்
புண்ணிய னபிதா னங்கொள் பெற்றிமைக்
கேற்பச் சிரபுரத் திலகு [illegible]

அஃதான்று
தண்ணளித் தருமன் தருங்கொடை வருணன்
வண்ண மன்மதன் வளர்நிதிக் கோமகன்
அன்ன பிறவுந் துன்னிய
சோம சுந்தரத் தூயமா மணியே.

சாத்துகவிகள் முடிந்தன

உ

சிவமயம்.

முருகக்கடவுள் துணை.

—o—

ஆசார விளக்கம்.

—o—

தற்சிறப்புப்பாயிரம்

சிவகுரு வெனமறை செப்பும் பொருளாம்
முருகவேள் மலரடி முடிக்கணி யாக்கிப்
பொன்னிசூழ் திரிசிர புரத்திற் றோன்றிப்
பாவலர் தம்மைப் பண்டித ராக்கியும்
வாய்மையை யெவர்க்குந் தூய்மையா வுணர்த்தியும்
பத்திப் பயிரைப் பரவிட வளர்த்தும்
ஒற்றுமை விதையை ஊன்றியும் நடைபெறும்
முத்து ராஜ மகாஜன சங்கம்
பொருந்திய மித்திரர் புகன்ற சொற்களை
உறுதியும் பெருமையும் உடையவாக் கொண்டே
ஆன்றோர் உரைத்த அவ்வையின் ஆசார
விளக்கம் புகல்வாம் மேதினி யோர்க்கே.

அவையடக்கம்.

பொருந்தா வியற்றிடப் புல்லறி வாளனும்
சிறியேன் தகுதியிற் சிறிதும் பொருந்திடா
திருப்பினும் பேரவா இதயத் திருந்தே
பிடரியைப் பிடித்துத் தள்ளலாற் பெரியோர்
பொறுப்பரென் றுன்னியே புகன்றன னாதலின்
குற்றநோக் காது குணமொன் றினையே
நோக்குதல் கடமையாம் நுண்ணறி வோர்க்கே.

நூல்.

1. நல்ல ஆசாரக் காரணம் நாட்டினில்
சொல்லிடில் ஒருவர் செய்ந்நன்றி அறிதல்
பொறுத்துக் கொள்ளுதல் பொல்லார்ங் கெவர்க்கும்
செய்யா திருத்தல் சிறந்தவ ரோடு
நேசம் புரிதல் நிலவுல கத்து
நடையை அறிதல் நல்லவா சகத்தை
ஓதுதல் கல்வியை ஓதுதல் அறிவை
விளக்கிக் கொள்ளுதல் என்றிவை எட்டே.

2. ஆசா ரத்தினை அமைவுறக் கொண்டோர்
நல்ல குடியிற் பிறந்திடு வாரே
பூரண ஆயுளைப் பொருந்திடு வாரே
சிறந்த அழகினைச் சேர்ந்திடு வாரே
இடம்பொரு ளேவல் எய்திடு வாரே
பிணியடை யாமற் பிறங்கிடு வாரே
கல்வியிற் சிறந்து கவினுறு வாரே
என்றிவை எட்டும் எய்துவ தன்றி
ஈசன் பதத்தில் இனிதுவாழ் குவரே.

3. சூரிய தேவன் தோன்றிட ஐந்து
நாழிகை முன்னர் நல்லநித் திரையை
விட்டெழுந் திருந்து வேத விதிப்படி
செய்ய வேண்டிய கருமச் செய்கையும்
பொருள்சே கரிக்கும் புத்தி விதத்தையும்
யோசனை செய்து உதித்ததன் பின்னர்
தாய்தந் தையரைத் தாழ்ந்தெழுந் திருந்து
மீறகா ரியத்திற் பிரவே சிப்பது
முறையென் றுரைத்தார் முதறி வோரே.

4. எச்சிலை ஒருவன் எய்திய சமையம்
உச்சந் தலையும் உயர்பசு வேதியர்
ஆலயந் தன்னில் அமர்ந்திடு கடவுள்
நெருப்பிவை ஐந்தொடு நேரே நெருங்கித்
தொடுதல் பாவமாச் சொல்லினர் பெரியோர்.

5. விண்ணில் எரிந்து வீழும்நட் சத்திரம்
நண்ணுவம் சூரியன் நாயொடு புலையன்
சந்திரன் என்னச் சாற்றும் இவற்றை
எச்சிலைப் பொருந்தி இருக்கும் சமையம்
கண்ணுற் காணுதல் கடும்பெரும் பாவமாம்
மண்ணுர் பெரியோர் வகுத்திட் டாரே.

6. எச்சில் வகையை இயம்பும் காலைப்
பலவகை யான பகுப்பிருந் தாலும்
முக்கிய மாகக் கொள்ளுதல் மொழிவாம்
மலஜலம் கழித்தல் மங்கையைப் புணர்தல்
உமிநீர் இவையென் றுரைத்தனர் புலவர்.

7. கூறிய நல்வகை எச்சிலைக் கொண்டோர்
சிறிய நூலைப் படித்திடல் செய்யார்
நித்திரை புரியார் நேர்உறும் மனிதர்கள்
எத்திறத் தவராய் இருப்பினும் அவரொடு
பேசவு மாட்டார் என்றனர் பெரியோர்.

8. புல்உள நிலத்திலும் பயிர்விளை நிலத்திலும்
சாணந் தன்னிலும் சாம்பல் தன்னிலும்
வழிநடை தன்னிலும் மயானந் தன்னிலும்
கோவில் தன்னிலும் குணமிகக் கொண்ட
பசுக்கள் நிறைந்த மந்தை தன்னிலும்
நிழலிலும் நீரிலும் மலஜலம் உமிநீர்
கழித்தல்கூ டாதென உரைத்தனர் பெரியோர்.

9. பகலில் தென்திசை தன்னை நோக்கியும்
இரவினில் வடதிசை தன்னை நோக்கியும்
மலஜலங் கழித்தல் மாட்சிமை ஆகா.

10. மலத்தையும் ஜலத்தையும் உமிநீர் தன்னையும்
கழிக்கும் காலை எட்டுத் திசையையும்
ஆகா யத்தையும் பூமி தன்னையும்
மனத்தால் மறைத்து மகிழ்வாய் அந்தரம்
தன்னில் இருந்து மலசலம் உமிநீர்
கழிப்ப தாகக் கருதுதல் வேண்டும்.

11. ஓடும் ஜலத்திலும் நிலைநீர் தன்னிலும்
நின் ... டந்தும் வாயினைக் கழுவுதல்
பாவ மாகும் பாத்திர மதனுல்
முகந்து கரையினில் கழுவுதல் முறையே.

12. காலையில் எழுந்து கருவேல் முதலா
ஆலங் கொம்பால் அமைவுறத் தந்தம்
சுத்தி செய்து சுத்தநன் னீரால்
கண்களைக் கழுவிக் கடவுளை வணங்கித்
தன்சமை யத்தில் சாற்றிய படியே
தொழுதுபின் காரியம் துவக்கல் வேண்டும்
அந்திப்பொழுதில் அரிதாம் கடவுளை
நின்று வணங்கல் நெறியல ஆதலால்
உட்கார்ந் திருந்தே உளமிக உருகி
வணங்குதல் ஒழுங்கென வகுத்தனர் பெரியோர்.

13. தெய்வ வணக்கம் செயப்போம் பொழுதும்
செய்யுநித் திரையில் தீக்கனைக் கண்ட
சமையந் தன்னிலும் சவரம் செய்து
கொண்ட பொழுதும் குணமிலா அசுத்த
சம்பந் தத்திலும் சம்போ கத்திலும்
வம்புறும் இழிந்த மனிதரைத் தொட்ட
காலம் தன்னிலும் கடும்பசி தீர
உண்ணும் பொழுதும் உண்டதை வாந்தி
பண்ணின பொழுதும் படுத்துநித் திரையை
அதிகமாய்ச் செய்த அமையந் தன்னிலும்
பலவித மாகப் பகரும் கவலையில்
மனமிக உழன்று வாடும் சமையமும்
சந்தே கத்தினைத் தான்கொள் ளாமல்
ஸ்நானம் செய்யெனச் சாற்றினர் பெரியோர்
காலொடு காலினைத் தேய்த்துக் கழுவுதல்
ஆகா தென்றே அறைந்தனர் அவர்தாம்.

14. இடையிலே வஸ்திரம் இல்லாது நீரில்
ஸ்நானம் செய்தலும் ஜலத்தி[illegible]ல் திரத்தைப்
பிழிதலும் பெரியோர் பெருஞ்சபைக் குள்ளே
இடையிலோ ராடையோ டேகலும் இடையில்
ஓராடை யுடனே உண்ணலும் தகாதென
ஆராய்ந் துரைத்தனர் அறிவுடை யோரே
கரையில்வஸ் திரத்தைப் பிழிந்துகட் டுகவே.

15. தலைக்கிடும் எண்ணெய் தான்வழிந் திட்டால்
வழித்து மேனியில் வளம்படப் பூசலும்
அன்னியன் உடுத்திய ஆடையைத் தொடுதலும்
என்ன சமையமாய் இருந்த போழ்தினும்
பிறர்தம் காலினில் அணிந்திடு செருப்பைத்
தன்கால் அணிதலும் தகாதெனக் கூறே.

16. நீரினுள் ளேதன் னிழலைப் பார்த்தலும்
காலினல் கையினல் நிலத்தினைக் கீறலும்
இரவினில் மரத்தடி இருத்தலும் ஆகா
வியாதியி னலே வெகுநாள் வருந்தி
வியாதி தீர்ந்தபின் முதல்முத லாக
எண்ணெயைத் தேய்த்து முழுகலா காது
முதல்முறை தனிலே ஓமநீர் விட்டு
ஸ்நானம் செய்து இரண்டாம் தடவையில்
எண்ணெய் ஸ்நானம் செய்திடல் வேண்டும்
எந்தக் காலமும் எண்ணெய்தேய்த் திருந்தால்
முழுகா முன்னே புலையரைப் பார்த்திடல்
ஆகா தென்றே அறைந்தனர் புலவர்.

17. ஸ்நானம் செய்யும் சமையம் தனிலே
காரி உமிதலும் கண்ட படியெலாம்
வி[illegible]யா டுதலும் விரும்பிநீந் துதலும்
கூடா வாகும் கொதிப்பு மிகுந்து
காய்ந்திருந் தாலும் கண்ட ஸ்நானம்
ஆகா தென்றே அறைந்தனர் பெரியோர்.

18. பூமியை ஜலத்தை நெருப்பினைக் காற்றை
ஆகா யத்தினை ஆகா யத்திலே
வருமசந் திரனைச் சூரியன் தன்னைப்
பார்ப்பார் தம்மைப் பசுவினைத் தன்னிலும்
மேலாம் பொருளென வேத விதிப்படி
நினைத்தல் வேண்டும் நினையா திகழ்ந்தால்
பூமியே முதலாச் சொன்னஐம் பூதத்து
உறுதே வதையின உடம்பினை விட்டு
நீங்குவர் என்றார் நெறிஉணர்ந் தோரே.

19. செல்வம் பெறவே சிந்தித் திருப்பவர்
அதிகா லையினில் அடைவுட னெழுந்து
வீட்டினைச் செவ்வையாய் விளங்கிடக் கூட்டிப்
பாத்திரங் கழுவிப் பசுஞ்சா ணத்தால்
தரையினை மெழுகித் தண்ணீர்க் குடங்களில்
நீரினை நிரப்பிப் பூவினை அணிந்து
அடுப்பில் நெருப்பிடல் அழகதாகும்
பகல்நே ரத்தில் நெருப்பினில் நீரை
விடுதல் தகாதென விளம்பினர் பெரியோர்.

20. அன்னம் உண்ணும் ஆக்கும் இடத்தினில்
அதிர்ந்து பேசலும் அறியா மனிதர்கள்
பலபேர் கூடியே பயனில்லாமல்
பேசும் இடத்தினைப் பார்த்தலும் பெண்கள்
வசிக்கும் இடத்தினில் வழக்க விரோதமாய்ப்
போதலும் தகாதெனப் புகன்றனர் பெரியோர்.

21. வீட்டில்உள் ளோரை மாத்திரம் நினைந்து
உலைவை யாமல் விருந்தும் வருமென
எண்ணிச் சமையலை இயற்றுதல் வேண்டும்
தனது சரீரம் பெருத்திட அன்னிய
ஜீவனைப் போக்கியூன் தின்னுதல் செய்யார்
சமையல் அறையினில் சாப்பிடப் படார்
வீட்டுத் தெய்வமா விளக்கினை ஏற்றி
அன்னம் படைத்துப் பூசனை அன்பொடு
செய்தபின் சாப்பிடல் சிறப்புடைத் தாகும்.

22 வாயையும் காலையும் வகையாய்க் கழுவி
ஸ்நானம் செய்து சாப்பிடும் [illegible]க்கைதர்
சுத்தசா ணத்தால் துலங்கிட மெழுகி
உண்ணுதல் வேண்டும் உரைத்த படியே
எல்லாம் செய்யா திருந்துவாய் மட்டும்
கழுவி உண்ணும் கசடர்தம் உணவை
அரக்கர் கொள்ளுவர் என அறைந் தனரே.

23. போஜனம் [illegible]ப் போகும் காலையில்
[illegible]லைக கழுவியே காலில் உள்ளநீர்
காய்வதன் முன்னர் கடுகியுட் கார்ந்து
சாப்பிடல் வேண்டும் சயனம் செய்திடப்
போகும் காலையில் காலைக் கழுவியே
[illegible]ல் உள்ளநீர் காய்ந்திடும் வரையில்
[illegible]யானத் திடனே உலாவுதல் செய்து
சயனம் செய்யெனச் சாற்றினர் பெரியோர்.

24. சாப்பிடும் பொழுதினில் கிழ்த்திசை முகமாய்
இருத்தல் வேண்டும் இருப்பதும் செவ்வையாய்ப்
உட்கார்ந் திருந்து ஒருவ ரு[illegible]
வாய்பே சாமல் மனத்தினில் கவலையை
நினையா திருந்து நேரில்உள் ளோரையும்
பக்கமுள் ளோரையும் பார்த்திடா திருந்து
தூங்கா துணைவைச் தொழுதுசிந் தாமல்
உண்ணுதல் முறையென உரைத்தனர் பெரியோர்.

25. சாப்பிடும் பொழுதினில் கீழ்த்திசை முகமாய்
இருத்தல் வேண்டும் என்றேும் அதற்குத்
தடைப்படில் தென்முகம் சார்ந்தே இருந்து
சாப்பிடல் வேண்டும் அதுவும் தடைப்படில்
மற்றிரு திசைகளில் வாயிலின் னேரே
இ[illegible] சாப்பிடல் இனிமைய தாகும்
துரையொன றிருந்திடில் சிறப்பின தாகும்
நித்திரை செய்தல் முகட்டின் கீழே
செய்தலா காதெனச் செப்பினர் பெரியோர்.

26. நின்றும் படுத்தும் உண்ணல்கூ டாது
வெ[illegible]வெளியிலும் உண்ணல்கூ டாது
அளவுக் கதிகமாய் உண்ணல்கூ டாது
கட்டிலில் இருந்தும் உண்ணல்கூ டாது
ஒழுங்கு கடந்து யாரொருவ ரானையும்
நின்று புசித்தலும் கூடா தாகும்.

27. தன்னிலும் [illegible]ர் தன்னொடு சாப்பிடில்
இடதுபக் கத்திலே இருத்தல் வேண்டும்
பெரியோர் உண்ணத் துவக்கின பிறகே
தான்உணத் துவக்குதல் தகுதி ஆகும்
பெரியோர் சாப்பிட் டெழுந்ததன் பிறகே
தான்எழுந் திருத்தல் தன்மைய தாகும்
இடதுபக் கத்தில் இருந்த போழ்திலும்
நெருங்கி இருத்தல் நெறியன் றாகும்.

28. சிறியோர் போஜனம் செய்திடுங் காலை
பெரியோர் உயர்ந்த பீடத் தின்மேல்
உட்கார்ந் திருத்தல் ஒழுங்கல சிறியோர்
என்ன தப்பிதம் செய் திருந்தாலும்
சாப்பிடும் போதவர் தம்மனங் கலங்க
ஒன்றையும் உரையார் உத்தமப் பெரியோர்.

29. சாப்பிடும் பதார்த்த வகையினைச் சாற்றிடில்
தித்திப் புள்ளதை முதல்முதல் உண்க
க்சக்கும் பதார்த்தம் கடைசியில் உண்க
மற்றைச் சுவையுள பதார்த்தம் தம்மை
இடையினில் உண்க என்றனர் பெரியோர்.

20. பெரியோர் புசித்துப் பசிதீர்ந் திருந்த
சமையமா னாலும் அவர்சமீ பத்தில்
இருந்து புசித்தல் கூடா தா[illegible]
சிறிய இலைதனில் புசித்திடல் வேண்டும்
புசிக்குங் காலம் பிரியத் துடனும்
ஆசா ரத்தொடும் புசித்தல் வேண்டு[illegible]

புசித்த இலையைச் சீக்கிர மாக
அகற்றி இடத்தினைச் சுத்தம் செய்திடல்
வேண்டும் என்றார் மிகுபெரி யோரே.

31. உண்டபின் வாயைக் கழுவும் விதத்தைச்
சொல்லிடில் வாயினில் ஜலத்தைச் சேர்த்து
உள்ளே புகாமல் கொப்பளித் துமிந்து
மூன்று தரம்இம் முறை செய்து
எச்சில் கை விரலையும் தாவாய்
தன்னையும் கழுவிக் கண்ணையும் காதையும்
நீராற் றுடைத்துக் கழுவுதல் நெறியே.

32. தாகம் தனக்குத் தண்ணீர் குடித்திடில்
இரண்டுகை யாலும் அள்ளிக் குடித்திடார்
இரண்டுகை யாலும் பாத்திரம் எடுத்துக்
குடிக்கவும் செய்யார் பெரியோர் கொடுப்பதை
ஒருகை தன்னால் வாங்கவும் மாட்டார்
ஒருகை தன்னால் பெரியோர் தமக்குக்
கொடுக்கவும் மாட்டார் இரண்டுகை யாலும்
தேகம் தன்னைச் சொரிந்திடல் செய்யார்.

33. அந்திநே ரத்தில் படுத்தலும் அசலூர்
போதலும் பசிமிகப் பொருந்திய போதிலும்
உண்ணலும் கூடா ஒழுக்கமாகும்
தீபம் ஏற்றிய உடனே தீப
தரிசனம் செய்து சார்ந்த இரவினில்
உணவை உண்டபின் வீட்டினை விட்டு
வெளியிற் போகாது வீட்டில் அடங்கி
இருத்தல் வேண்டும் யாவரே யாயினும்
கோபித் துரைத்தல் கூடா தாகும்.

34. விருந்தினர் வயது சென்றவர்
பசுகள் குழந்தைகள் பசுக்கள் இவர்க்கு
உணவைக் கொடுத்தவர் உண்ட தன் பின்பு
தான்புசித் திடுதலே தகுமென மொழிவர்.

35. விருந்தின ராக விரும்பிவீட் டிற்கு
வருபவர் தமக்கு மனமகிழ் வாகப்
புன்னகை முகத்தில் பொருந்திடக் காட்டி
நல்ல வார்த்தையை நவின்றுப சரித்துக்
காலினைக் கழுவ நீரினைக் கொடுத்து
உட்கார்ந் திருக்கவோ ராசனங் கொடுத்துத்
தன்னிலை மைக்குத் தகுந்தவா றுகப்
போஜனங் கொடுத்துப் புகழ்தாம் பூலம்
அளித்தவர் தம்மோ டருகி லிருந்து
க்ஷேமலா பத்தைச் செவ்வையாய்க் கேட்டுப்
படுத்திடத் தகுந்த இடமும் படுக்கையும்
கொடுத்திடல் நெறியெனக் கூறினர் பெரியோர்.

36. கல்யா ணத்திலும் கடவுளுக் குரிய
திருவிழா தன்னிலும் சிரார்த்தநாள் தன்னிலும்
யாககா லத்திலும் விரதநாள் தன்னிலும்
தான தருமம் தருவ துடனே
விருந்தும் செய்திடல் வேண்டும் என்ப.

37. அஷ்டமித் திதியிலும் அமாவா சையிலும்
பூரணச் சந்திரன் பொருந்து நாளிலும்
சதுர்த்தசித் திதியிலும் சாற்றிய மேகம்
இடிக்கும் பொழுதும் இராசன் தனக்குக்
கலக்கம் வந்த காலம் தன்னிலும்
பூமி யதிர்ந்திடு பொழுதிலும் அசுத்தம்
தன்னைப் பொருந்திய சமையம் தன்னிலும்
சாஸ்திரம் படித்தல் தகாதென மொழியே.

38. பாடம் கேட்கும் பகுப்பினைச் சொல்லிடில்
ஆசான் சொல்லும் வரையினிற் கேட்டலும்
சொல்வதை நிறுத்தினால் சும்மா இருத்தலும்
சொல்லும் பொருளினைக் காது கொடுத்து
வணங்கிக் கேட்டலும் வகுத்துரை யாமல்
விட்டால் தானதை வினவா திருத்தலும்
போவெனப் போதலும் பொருந்தின வாகும்

39. அன்னையும் தந்தையும் அரசனும் தமையனும்
முன்படிப் பித்திடு உவாத்தியார் ஐவர்
ஒப்பிலாக் குருவென் றுரைக்கு மதனால்
தெய்வம் தன்னிலும் சிறந்தவர் என்றே
கொள்ளுதல் கடனெனக் கூறினர் பெரியோர்.

40. அன்னை முதலா மேலே சொல்லிய
பெரியோர் வார்த்தையைக் கடந்தொரு காரியம்
செய்தலாகாது விரதம் செய்பவர்
கொண்ட விரதம் பூர்த்தியா கும்முன்
மத்தியில் விடுதல் மாட்சிமை யாகா
பூரணச் சந்திரன் பொருந்து நாளிலும்
அமாவாசையிலும் சிரார்த்தநாள் தன்னிலும்
மரத்தினை வெட்டலும் மரத்தின் கொம்பால்
தந்த சுத்தியைச் செய்தலும் தகாதென
முந்தின பெரியோர் மொழிந்தனர் முறையே.

41. வேதம் ஓதிடும் வேதியர் தம்மைத்
தாயைத் தந்தையைக் குருவை நிகரெனக்
கொள்ளுதல் முறையெனக் கூறினர் பெரியோர்.

42. தந்தையே முதலாம் பெரியோர் தமக்குச்
செயுமரியாதையைச் செப்பிடுங் காலைப்
பார்த்த வுடனே பணிதல் வேண்டும்
பணிந்திடு சமையம் எழுந்திடச் சொன்ன
பிறகே எழுந்திடல் வேண்டும் பெரியோர்
தம்மைக் கண்டால் தான் எழுந்திருத்தலும்
நன்மை யாமென நவின்றனர் புலவர்.

43. இல்லறங் கடந்த துறவறத் தாரை
அன்புடன் காத்திடல் அழகதாகும்
பரமாத்மாவிக்குப் பயப்படல் வேண்டும்
என்ன கல்வியைக் கற்றிருந் தாலும்
பெரியோர் முன்னே பெருமைசொல் லாமல்
அடங்கிச் சொல்லுதல் அழகதாகும்.

44. தந்தை தமையன் அன்னை அரசன்
ஆசான் இவர்கள் ஐவர் தம்மையும்
தம்மில் தாழ்ந்த ஜாதியார் தம்மையும்
என்ன போஜனம் புசித்தீர் எனவே
வினவலா காதென விளம்பினர் பெரியோர்.

45. தொடங்குங் காரியம் சுகமுற வேண்டிச்
சரியாம் நாளினைச் சாற்றுவீ ரென்று
வேதிய ரிடத்தில் விருப்பொடு கேட்டிட
வேண்டுமே யல்லது தாழ்ந்தவ ரிடத்தில்
கேட்டலா காது வேதியர் சொன்னால்
வாய்விசே டத்தால் வளம்மிகப் பெருகித்
தொடங்குங் காரியம் சுகம்மிகப் பெறும்.

46. பெரியோர் இருக்கும் பெருஞ்சபை தன்னில்
கனைத்தல் சிரித்தல் கையினை நொடித்தல்
தலையைச் சொரிதல் தகாச்சொல் உரைத்தல்
பரிகா சம்செயல் பண்ணலா காது
இருவர் கூடியோ ரிடத்தி லிருந்து
பேசும் சமயம் அவரிடம் பேசிடப்
போதலா காதெனப் புகன்றனர் பெரியோர்.

47. பெரியோர் எதிரே கையினை நீட்டிப்
பேசலா காது பெரியோர் கொடுப்பதை
உட்கார்ந் திருந்து வாங்கலா காது
கல்வி முதலாக் கனம்பெற் றோருடன்
கல்வியும் அறிவும் இல்லார் தங்களைச்
சமமாச் சொல்லுதல் தகாதது வாகும்
தரையினிற காலால் எழுதலும் தகாதே.

48. பெரியோர் முன்னே பேசிட வேண்டில்
வணங்கி யாயினும் வாயினைக் கையால்
பொத்தி யாயினும் பேசுதல் பொருந்தும்
பேசும் பேச்சிலே குற்றம்வந் துறாமல்
கவன மாகப் பேசுதல் கடனே.

49. பெரியோர் தம்மொடு பிரயா ணம்செயின்
வாகன மாதியில் ஏறலா காது
காலில் செருப்பினை அணியலா காது
கையிற் குடையினைப் பிடித்தலா காது
வலத்திற் பெரியரும் இடத்திற் சிறியரும்
போகுதல் ஒழுங்கெனப் புகன்றனர் புலவர்
குடையும் செருப்பும் கொள்ளா னாகிப்
பெரியோர் தம்மொடு பிரயா ணம்செய
ஆற்று திருந்திடில் அவரைமுன் விட்டுப்
பின்னே செல்லுதல் பெருமைய தாகும்.

50. தக்ஷிணை கொடுத்தலும் தவத்தினைச் செய்தலும்
மெச்சிட யாகம் விரும்பியே செய்தலும்
கல்வி கற்றலும் ஆகிய இவைகள்
அறநூல் பொருள்நூல் இன்பநூல் என்னும்
மூன்றுநூல் சொன்ன முறைபிற ழாமல்
செய்தல் வேண்டும் செய்யா விடினே
எய்தார் பயனை என்றார் புலவர்.

51. பார்ப்பார் கூட்டத் துள்ளே புகுந்து
செல்லலா காது ஆலயத் திருக்கும்
சாமிகள் வீதியில் வரும்சம யத்தில்
இரண்டுசா மிக்கு இடையே நுழைந்து
போதல்கூ டாது தும்மின பொழுதும்
தன்னைப் பெரியோர் வாழ்த்தின சமையமும்
கடவுளைத் தொழுதல் கடமை ஆகும்
செல்லும் வழியினில் சமமாம் சிநேகிதர்
எதிர்ப்படில் களிப்புடன் எதிரே செல்லுக.

52. ஒருவர்கண் ணுக்குமை இட்டகோல் தன்னைச்
சுத்திசெய் யாமல் பிறர்கண் ணுக்கு
மையிட லாகா மறையோர் பெரியோர்
கையினாற் கிடைத்த பிரசா தத்தையும்
கடவுளா லயத்துப் பிரசா தத்தையும்

வாங்கிய வுடனே மனமகிழ் வாகச்
சிரசிலும் கண்ணிலும் சேர்த்திடல் வேண்டும்.

53. எவ்விதப் பட்ட இடமா யிருப்பினும்
பெரியோர்க் கெதிரே மேற்போர் வையினை
அணிதலா காது அவர்க்கெதி ராக
இறுமாப் படைந்து இருத்தலா காது
கால்மேல் காலினைப் போட்டெ தி ரிருந்தலும்
ஆகா தென்றே அறைந்தனர் புலவர்.

54. அரண்மனை தன்னிலும் ஆலயம் தன்னிலும்
திறமிகு திருவிழா செய்யும் இடத்தும்
வேட்டை ஆடுதல் முதலாம் வேலையாய்ச்
சென்ற மன்னவன் திரும்பியூர் புகுந்து
ஊர்வல மாக வரும்சமை யத்திலும்
பெரியோர் தம்மைக் கண்டால் அவர்களை
வணங்கிட லாகா தெனவகுத் தனரே.

55. முன்பின் னறியா மனிதரோ டிருந்து
தானசெயும் காரியம் தன்னையா ராய்தலும்
பிறரோ டரசன் பேசும் பேச்சினைக்
கவனமாய்க் கேட்டலும் கல்வி யறிந்தோர்
செய்யார் என்றே செப்பினர் பெரியோர்.

56. அரச னிருந்திடும் அருஞ்சபைக் குள்ளே
போதும் பொழுதினில் போகப் படாதெனத்
தடுத்திடில் கோபம் தான்கொளல் ஆகா
மன்னவன் தனக்கு வரிசையைக் கொடுக்கும்
சமையந் தனிலும் தகுமரி யாதையைக்
கொடுக்கும் பொழுதும், குறையெனக் கூறுதல்
ஒழுங்கே அல்ல அரசனை ஒக்கத்
தானலங் கரித்தலும் தகாததுவாகும்
வேந்தர் சபையினில் விளங்குவோர் நடுவினில்
புகுந்து செல்லுதல் பொருந்தா தாகும்

அறியா மனிதர் அருகி லிருத்தலும்
சரியன் றுமெனச் சாற்றினர் பெரியோர்.

57. மன்னவன் செய்திடு காரியம் மறுத்தலும்
மன்னவ னோடு கலகம் செய்தலும்
மன்னவன் றன்னைப் பழித்தலும் மன்னவன்
மனைவி யுடனே மனமகிழ் வாகத்
தனித்திடும் சமையம் தன்கா ரியத்தைச்
சொல்லலும் இனிமையாம் பொருளினை நாங்கள்
அனுபவித் தறிந்துளோம் என்றர சனுக்குச்
சொல்லலும் ஆகா தெனச்சொல் லினரே.

58. மன்னவன் எதிரே எச்சிலை உமிதலும்
மன்னவன் காண உயர்ந்தவா சனத்தில்
ஏறி யிருத்தலும் இனியதாம் பூலம்
மன்னவன் எதிரே வாயிற் கொள்ளலும்
பிரயோ ஜனமிலாப் பேச்சினைப் பேசலும்
மன்னவன் எதிரே தூங்கலும் என்றிவை
நன்னெறி அன்றென நவின்றனர் பெரியோர்.

59. தனக்குறு செல்வம் கல்வி அழகு
துணைஎன் றிவற்றைக் கோமகன் முன்னே
அடிக்கடி சிறப்பித் தறைதல் கூடாதே.

60. வேந்தன் முன்னே கொட்டாவி விடுதலும்
காரி உமிதலும் கனைத்துச் சிரித்தலும்
தும்மலு மாகா தெனச்சொல் லினரே.

61. பாம்பு நெருப்பு சிங்கம் ஆகிய
இவைதாம் சிறியன பழகின என்றும்
இளைத்திருக் கின்றன என்றும் நெருங்கினல்
அவைதம் சேட்டையைக் காட்டிடும் அல்லால்
அணம்செய் யாவெனக் கூறினர் புலவர்.

62. பேரனை ஒக்கப் பொருளிருந் தாலும் —
தான்செயும் தருமம் தரும்தொழில் முயற்சி

வீட்டினைக் கட்டல் விரும்புகல் யாணம்
ஆகிய இவற்றை அரசனைப் பார்க்கிலும்
அதிகமாய்ச் செய்குதல் யார்க்குமா காதே
செய்திடில் தம்மிடம் சேர்ந்திடு செல்வம்
குறையுமென் றுரைத்தார் குணம்பெரி யோரே.

63. அறிமுக மில்லான் வீட்டுக் குள்ளே
புழைக்கடை வழியாய்ப் போகலா காது
கூத்து விகட மாதியை அரசன்
கண்டு களிக்கும் சமையம் தனிலும்
மனைவியர் தம்மொடு மனமகிழ் வாக
உல்லா சத்துடன் உறையும் சமையமும்
போகக் கூடிய பொறுப்பினை யுடையோர்
அல்லால் மற்றவர் அணுகலா காது

64. அன்னியன் மனைவியை அன்னையென் றெண்ணுக
கள்ளையும் களவையும் சூதையும் கொலையையும்
தள்ளுக தள்ளுக சாற்றிய படியே
செய்தால் புகழும் சுவர்க்கமும் சேரலாம்
செய்யா விடினே இகழ்ச்சியும் நரகமும்
எய்தும் என்றார் இயல்புணர்ந் தோரே.

65. பொய்பே சுதலும் பொறாமைகொள் ளுதலும்
கோள்சொல் லுதலும் பிறர்பொருள் கொள்ள
மனத்தினில் நினைத்தலும் மாண்புடை யோர்கள்
எக்கா லத்தினும் செய்யார் செய்தால்
பிச்சை எடுப்பார் பெருநர கடைவார்
பட்ச பாதக மில்லாக் கடவுள்
அச்சமுண் டாக அழித்திடும் தானே.

66. உடுக்கும் ஆடையும் நடக்கும் ஒழுங்கும்
வார்த்தை பேசலும் பிறரை வைதலும்
அவரவர்க் குரிய அந்தஸ் திற்கும்
வல்லமை தனக்கும் வளர்ந்திடு கல்வியைக்
கற்றதன் மைக்கும் குடிப்பிறப் பிற்கும்
ஒத்ததா யிருத்தல் ஒழுங்கா கும்மே.

67. பலபேர் கூடிய கூட்ட நடுவிடை
நித்திரை புரிதலும் ஒருவனைப் பழித்தலும்
தீங்க தாகும் தன்னால் செய்கிட
முடியா வேலையை முடித்துத் தருவதாய்ச்
சொல்லிப் பின்பதைச் சோர விடுதலும்
ஏழையர் தம்மை இகழ்ந்து பேசலும்
கூடா நெறியெனக் கூறினர் பெரியோர்.

68. பிரயோ ஜனமிலாப் பேச்சும் வஞ்சனைச்
சொல்லும் பழிச்சொலும் தோன்றிய படியே
அடக்கமில் லாமல் அறைந்திடு சொல்லும்
புறங்கூ றுதலும் புகழில வாகும்.

69 கல்லினை எறிதலும் கனைத்தலும் ஒன்றை
வீசி எறிதலும் வேகமாய் நடத்தலும்
உள்ளதை மறைத்தலும் ஒருவர்செய் செய்கையைப்
போலத் தானும் செய்து பழித்தலும்
கைதட் டுதலும் கடுகியே தூரமாப்
போனவர் தம்மைப் பொருந்த அழைத்தலும்
வெளிப்பனை யாக விரலினை ஒடித்தலும்
மூக்கை நோண்டலும் முகத்தினை சுளித்தலும்
கண்ணைப் பிசைதலும் காதினைக் குடைதலும்
கூடாச் செயலெனக் கூறினர் பெரியோர்.

70. விவேகமில் லாமலே சண்டையை விளைத்திடும்
இடத்திலும் கள்ளினை எறக் குறையப்
புசித்துக் கலகம் புரிவோர் இடத்திலும்
வாழ்நா ளதனை வீண்நா ளாக்கும்
வேசியர் மனையிலும் வெகுநா ளாக
நேசித் திருந்தவர் நேச நிலையினில்
தளர்ந்த விடத்திலும் தண்ணீர்க் கரையிலும்
நின்றுகா லத்தை நெடிதாப் போக்குதல்
நன்றே அன்றென நவின்றனர் பெரியோர்.

71. தான்செய் கருமமும் தான்செய் விரதமும்
பிறாகருத் தாம்செய் நன்றியும் தாமே
பெருமையாச் சொல்லுதல் பெரும்பிழை யாகும்
பிறரிடத் துண்ட போஜனந் தன்னை
இகழ்ச்சியாய்ச் சொல்லுதல் இழிவ தாகும்.

72. கிட்டாதாயின் வெட்டென மறவென்
றௌவை கூறிய அருமறைப் படியே
கிடைத்தற் கரிதாம் பொருளினை விரும்பேல்
இழந்த பொருளினை நினைந்து வருந்திடேல்
எவ்விதத் துன்பம் வந்த போதிலும்
முன்செய் வினையின் பயனென நினைந்து
சகித்துக் கொள்ளுதல் சாஸ்திர முறையே.

73. வம்புப் பேச்சுகள் வளருமிடத்தும்
சூதினை ஆடுவோர் சூழ்ந்த இடத்தும்
நல்ல அறிவினர் போகார் போனால்
தொல்லையே அன்றிச் சுகமில்லை யாகும்.

74. இரண்டு விளக்குகள் இடையினிற் போகேல்
உமிநீர் தன்னைச் சுவற்றின்மேல் உமியேல்
எதிரி சேனைகள் எதிர்த்து வரினும்
கட்டிய வஸ்திரக் காற்றுப் பிறர் மேல்
வீசிட நடவேல் விளங்கிடும் பலர்கள்
கூடிய கூட்டம் தன்னில்வஸ் திரத்தை
அவிழ்த்து உதறலும் ஆகா தாகும்.

75. மிருதியாய அடர்ந்து விளைந்தபுல் லிடத்தும்
அதிகமாய் வளர்ந்து அடர்ந்தகாட் டிடத்தும்
கூடி யிருப்பது குற்றம தாகும்
கூறிய புல்லையும் காட்டையும் கொளுத்தலும்
குற்றமே ஆகும் குணஞ்செய் மழைதான்
பெய்யுங் காலையில் காலைப் பரப்பியே
ஓடலா காது ஒன்றும் தெரியாக்
காட்டினிற் றனிவழி கடத்தலா காது

மழைபெய் யாது வறண்டுல கந்தான்
தத்தளித் தாலும் தன்குடிப் பிறப்பின்
ஒழுக்கம் கடவா துறைதல் வேண்டும்.

76. உட்கார்ந் திருந்தவர் ஒருகா ரியத்தைச்
செய்திட எழுந்து செல்லுஞ் சமையம்
தும்மல்கூ டாது சொல்லுக செல்லிடம்
[illegible] து இறைந்துகூப் பிடுதலும்
கூடா தாகும் குறுக்கே மறித்து
எதிரே நின்று வார்த்தையா டாமல்
பக்கத் திருந்து பகருதல் வேண்டும்.

77. பூர்வஜன் மத்தில் செய்தபுண் ணியத்தால்
வியாதியில் லாமல் விளங்குவோன் தன்னைப்
பார்த்துன் தேகம் பளபளப் பாக
இருக்கிற தெனஅவர்க் கியம்பலா காது

78. பார்ப்பார் தம்மையும் பாலகர் தம்மையும்
மூத்தோர் தம்மையும் முனிவர்கள் தம்மையும்
தலையிற் சுமைதனைத் தாங்கினோர் தம்மையும்
மங்கையர் தம்மையும் பசுவையும் வியாதியால்
நொந்தவர் தம்மையும் எதிர்வர நோக்கினுல்
விலகிச் செல்லுதல் மேன்மைய தாகும்.

79. பெரியோர் விரும்பின பொருளைத் தான்பெற
விரும்பலா காது வீட்டினுக் குள்ளே
குலத்திலும் அறிவிலும் குறைந்த மனிதரைக்
கூட்டிப் போகுதல் கூடா தாகும்
பழக்கமில் லாதவர் யாலரே யாயினும்
உயர்த்திப் பேசலே ஒழுங்க தாகும்.

80. பேசும் சொல்லில் அவசரப் பட்டிடேல்
சொன்னதைத் திருப்பிச் சொல்வதை ஒழித்திடு
பொய்பே சுவதைப் பொருந்தா தகற்றிடு
அற்பக் காரிய மாயினும் அவற்றைப்

பெரிதா விரித்துப் பேசுதல் நீக்கிடு
சொல்லவேண்டிய சொல்லைச் சுருக்கியே
எல்லாம் விளங்கிட எவரும் மனங்கொளக்
காலம் தனக்கு ஏற்ற படியே
சொல்லுக என்றனர் சொலலறிந் தோரே.

81. பெரியோர் சபைதனில் ஆடையைப் அவிழ்த்தலும்
காதைச் சொரிதலும் கையைமேல் நீட்டிப்
பேசலும் பெண்களைப் பார்த்தலும் பிறர்தாம்
தன்செவி நெருங்கிச் சாற்றிடும் சொல்லைக்
கேட்டலும் தகாதென உரைத்தனர் கிழவோர்.

82. புத்தி நுட்பம் பொருந்திய அறிஞர்
துன்பம் வந்தால் துயரம் கொண்டிடார்
இன்பமுண் டாகில் எவர்க்கும் நன்மையைப்
பிரியத் துடனே செய்வார் பிறர்தாம்
தம்மேல் வைத்த தயவு தளர்ந்திட
அறிந்தால் அவர்வாழ் வீட்டினை அடையார்.

83. அடங்காக் கோபம் அடைந்திருந் தாலும்
பெரியோர் பெயரைச் சொல்லலா காது
கொண்டபெண் டீர்மேல் கோபம் கொண்டால்
வெறுப்புடன் வீட்டினில் வெகுநே ரம்வரை
இருத்தலா காது தம்மிற் சிறந்திடு
பெரியோர் தம்மையும் புலவர்கள் தம்மையும்
தந்தை தமையன் மாமன்மைத் துனனெனும்
முறைப்பெயர் தன்னால் கூப்பிட லாகா.

84. தன்னுடன் பேசி நிற்பவர் நிழலை
மிதித்துக் கொண்டு நிற்ற லாகாது
பேசும் பேச்சைப் பேசிடு முன்னே
யோசனை செய்து பேசிடல் வேண்டும்
ஊரார் நமக்கு வெறுப்பாம் செய்கையைச்
செய்தல்கூ டாது அரசனைச் சேர்ந்த
படையின் அளவினைப் பகைவர் தமக்குச்
சொல்லல்கூ டாதெனச் சொல்லினர் பெரியோர்.

85. ஒருவர் அணிந்த பூவையும் ஒருவர்
மோந்த பூவையும முடிக்கலா காது
ஒருவா தண் ணீரை உண்டபாத் திரத்தைக்
கழுவியே மற்றவர் கையி லெடுத்துத்
தண்ணீ ரருந்துதல் தகுமென மொழியே
பார்ப்பார் பசுவைத் தானம் கொடுத்தால்
வாங்கல் கூடாது தான் புசித் திட்ட
மிச்ச உணவைப் புலையன் தனக்குக்
கொடுத்தல்கூ டாதெனக் கூறினர் பெரியோர்.

86. தனது தேகம் தனது மனைவி
தன்னிடம் பிறர்தாம் அடைக்கல மாக
வைத்த பொருள்கள் ஆபத்து வந்தால்
செலவு செய்திடச் சேர்த்த பொருள்கள்
ஆகிய இவற்றினை அருமை யாகக்
காத்திடல் வேண்டும் காவா விட்டால்
துன்பம் பெரிதாத் தொடருமென் றுரே.

87. கிடைக்காச் சமையம் உண்ண வேண்டிக்
கிடைக்கும் சமையம் தேடி வைத்திடும்
எறும்பைப் போலவும் குளிர்பனிக் காற்றிற்
குதவி யாகக் கூடுகட் டிக் கொளும்
தூக்கணாங் குருவியைப் போலவும காக்கைதான்
உண்ணத் துவக்கும் பொழுதினில் இனத்தை
அழைத்துச் சேர்த்து உண்ணுவதல் போலவும்
இல்லற தருமம் நடத்துவா ராயின்
புகழும் சுவர்க்கமும் பொருந்துவ வாரே.

88. கட்டிலில் [illegible]வோர் காலைக் கழுவலும்
பூவை அணிதலும் சந்தனம் பூசலும்
கட்டிலி னருகில் நிற்றலு மாகிய,
இவைகூ டாவென இயம்பினர் பெரியோர்.

8[illegible]. வேசியர் வாழும் வீட்டுக் கருகினில்
குடியதி லிருந்தால் மனைவியின் குணமும

தனது குணமும் தான்மிகக் கெட்டு
வேறுபட்டு விகற்பம தாய் விடும்.

90. கற்புறு மங்கையர் கணவன் அழகினை
அல்லால் பிறர்தம் அழகினை[illegible] பாரார்
தன்னழ கதனையும் தானே[illegible] பாரார்
தலைமயிர் முடிக்கும் சமையம் தவிர்த்து
அடிக்கடி தலைமயி ரதனைக் [illegible]தலும்
கையினை நொடித்தலும் கனவிலும் செய்யார்.

91. நாணம் மடமே அச்சம் பயிர்ப்பெனக்
கூறிய நான்கையும் உடைமையாக் கொண்டே
மனையினை விளக்கலும் பாத்திரம் துலக்கலும்
உணவைச் சமைத்தலும் ஆகிய வேலையில்
திறமா யிருத்தலே சிறப்ப தாகும்.

92. வரும்படி அறிந்தே [illegible]லவு செய்தலும்
இடர்வந் துற்[illegible] காலம் தனிலே
தைரியஞ் சொல்லித் தேற்றலும் தருமம்
செய்யு மிடத்துச் சிறப்புடன் செய்தலும்
விருந்தளிப் ப[illegible]லே விரும்பியே செய்தலும்
புருஷன் மனத்திற் கேற்ற படியே
இல்லறம் நடத்தும் இயற்கையைப் பொருந்தலும்
உலக நடக்கையை உணர்ந்து நடத்தலும்
ஈசுர பத்தியை இருதயத் திருத்தலும்
ஆகிய குண[illegible]ளை அ[illegible]ங்கா ர[illegible]டன்
பூஷண ம[illegible] கொண்[illegible]டமங் கையரை
உலகம் வ[illegible]ழ்த்துமென் [illegible]வரைத்தனர் பெரியோர்:

93. பிறந்தத[illegible] முதலா வாழ்க்[illegible]படும் வரை
அன்னை தந்தையர் ஆதர [illegible]தனிலும்
வாழ்க்கைப் பட்டபின் ம[illegible]மகன் வ[illegible]த்திலும்
[illegible]மக னிறந்[illegible]ல் மைந்தர்கள் வசத்திலும்
[illegible] மைந்தர் தாமும் இலரே யாயின்
சுற்றத் தவர்க[illegible] சொல்லும் சொல்லிலும்

அடங்கி யிருத்தலே அறிவுடைப் பெண்கள்
இயல்பா மாதலின் தன்மனம் போலத்
திரிதல்பெண் களுக்குச் சிறப்பில தாகும்.

94. மின்னல் தன்னையும் விண்ணி லிருந்து
எரிந்து வீழ்ந்திடும் எரிநட் சத்திரம்
தன்னையும் வேசியர் தாம்அலங் கரிக்கும்
அலங்கா ரத்தையும் அந்தி வெயிலையும்
காலை வெயிலை[illegible]ம் கண்ணுற் பார்த்தால்
தேக காந்தி சிதறிடு மாகையால்
பார்த்தல்கூ டாதெனப் பகர்ந்தனர் பெரியோர்.

95. வியாதியில் லாமலே விளங்க விரும்பினோர்
பாழ்மனைக் குள்ளும் பலவாம் பிணங்களைச்
சுட்டுப் புதைக்கும் சுடுகாட் டுள்ளும்
கோயிலுக் குள்ளும் குடிகளில் லாத
ஊரின் புறத்திலே [illegible]ன்றியாய் நின்றிடும்
பழைய மரத்தின் அடியிலும் பழகினோர்
ஒருவரை யேனும் கூடக் கொண்டு
செல்லுதல் வேண்டும் பகலில் நித்திரை
செய்தல்கூ டாதெனச் செப்பினர் பெரியோர்.

96. வாயினால் விளக்கினை ஊதி நிறுத்திடேல்
அடுப்பு நெருப்பையும் அவித்திடல் செய்யேல்
அடுப்பு நெருப்பின் அருஞ்சுடர் மேலே
படக்[illegible] காய்தலும் பா[illegible] தாகும்

97. அளக்கும் படியினை ஆசனப் பலகைமேல்
வைத்தலா காது ஆசனப் பலகையைக்
கவிழ்த்தலா காது தலைக்கடை தன்னில்
கோடிவஸ் திரத்தைப் பிரித்தல்கூ டாது
தலைக்கடை தன்னில் கட்டிலை யிட்டுப்
படுத்தலா காது பழக்கமில் லாத
ஒருவ ரெதிரிலும் நிற்கலொண் ணாதே.

98. கல்யா ணத்தைக் களிப்புடன் செய்யும்
பந்தலின் கிழ்க்கரிப் பானை தன்னையும்
துடைப்பத் தினையும் தூசி தன்னையும்
கிழிந்தகட் டிலையும் பூவின் கீழே
பொருந்திப் இதழையும் போடுதல் கூடா.

99. நித்திரை செய்யப் படுக்குங் காலையில்
தெய்வம் தொழுதே படுத்தல் வேண்டும்
வடதிசை தன்னிலும் நான்குமூ லையிலும்
சிரசினை வைத்தல் தீங்க தாகும்
படுக்குங் காலையில் மேலே வஸ்திரம்
போர்த்துக் கொள்ளுதல் பொருந்தின தாகும்.

100. மங்கையர் தாமும் வழக்க மாக
மாதா மாதம் மனைக்குத் தூரமாய்
இருக்குங் காலையில் மூன்று நாளும்
அவர்முகம் பார்த்திட லாகா தவர்தாம்
நான்காம் நாளில் நீரா டியபின்
பன்னிரு நாள்வரைப் பாலருண் டாக
ஏதுவா யிருக்கும் கால மாதலால்
விட்டுப் பிரிந்திடா திருத்தல் வேண்டும்.

101. பட்டப் பகலிலும் பௌரணை தன்னிலும்
அஷ்டமித் திதியிலும் அர்த்தராத் திரியிலும்
அதிகா லையிலும் ஆதிரை தன்னிலும்
திருவோ ணத்திலும் ஜனனநாள் தன்னிலும்
அமாவா சையிலும் அன்புடன் மனைவியைப்
புணருதல் தீங்கெனப் புகன்றனர் பெரியோர்.

102. மனத்தினை அடக்குதல் மகரிஷி தனக்கும்
அரிதா மாகையால் அன்னை சகோதரி
தன்மகள் இவர்கள் தனித்தே இருக்கும்
இடந்தனில் தான்போய் இருந்திட லாகா.

103. இதுவரைச் சொல்லிய ஆசா ரத்தினைக்
கைப்பற் றுதலே கடனென் றாலும்
கைக்கொள முடியார் சிலருண் டவர்தாம்
தன்னூர் விட்டு வேற்றூர் போனவர்
யாசகம் செய்தே பிழைக்கின் றவர்கள்
வயது முதிர்ந்த விருத்தாப் பியர்கள்
பக்குவந் தெரியா இளஞ்சிறு பாலர்கள்
சகிக்க முடியாப் பிணிதனைச் சார்ந்தோர்
பலவிதத் தாலும் பயந்த மனத்தோர்
பசியினைப் பொறுக்க முடியாப் பகுப்பினர்
அரசன் வேலையில் அமர்ந்திருக் கின்றவர்
கையிற் கங்கணம் கட்டிய மணமகன்
ஆகிய இவரென் றறைந்தனர் பெரியோர்.

வாழ்த்து.

கடவுள் வாழ்குக கடவு ளருளினை
அடையுமான் மாக்கள் வாழ்குக அடைகுறப்
பற்றாய் நிற்கும் பாசம் வாழ்குக
வேதா கமங்கள் வாழ்குக அவற்றின்
சாரந் தெரித்த சைவ சமைய
ஆச்சா ரியர்களும் அறுபான் மும்மை
நாயன் மார்களும் நலந்திகழ் மற்றை
அடியார் கூட்டமும் அந்தண முதலா
வகுத்த நால்வகை வருணத் தாரும்
குறையிலா தாண்டிடும் கோமகன் றானும்
சொன்னவா சார நூலினைச் சொலற்குக்
காரண ராகிய கண்ணுதற் கடவுள்
அருள்வழி வந்தோ ராகிய முத்து
ராஜ மகாஜன சங்கத் தார்களும்
வாழ்குக வந்த மகாசபை தன்னைச்
சேர்ந்த பலரும் சிறப்புடன் வாழ்குக

அன்னை பிதாகுரு அனைவரும் வாழ்குக்
கொங்குதேர் வாழ்க்கை அஞ்சிறைத் தும்பி
சேர் த்ண்டலைசூழ் சிரபுரஞ் சார்ங்க
வரகனன் னேரிபை வாசமாக் கொண்டோன்
கொல்லா விரதம் குடிகொளும் மா பினன்
புலவர் சிகாமணி எனப்பெயர் பூண்டோன்
கங்கை குலத்தினன் துங்கமார் முருகன்
பாதம் பணிந்திடும் பண்பையே கொண்டோன்
குழந்தை வேலெனும் குரிசில் பயந்த
சோம சுந்தரம் சொல்லிய விந்த
ஆசாரத்தினை விளக்கிப் பலர்க்கும்
காட்டும் நூலும் வாழ்குக இதனைப்
படித்தோர் கேட்டோர் பலரும் வாழ்குக
நேச மருதவென் னேசர்கள் வாழ்குக
வரசமிகுத்த வென் மாணவர் வாழ்குக
மாத மும்மாரி பொழிமழை வாழ்குக
அறம்பொரு ளின்பம்வீ டாகிய நால்வகைப்
புருஷார்த்தங்களும் புலவோர் கூட்டமும்
ஆனினந் தாமும் அடைவுடன் வாழ்குக
சுத்தாத் துவித சைவசித் தாந்தம்
வாழ்குக பழனிமா மலையில் எழுந்தருள்
எங்குல தெய்வமாம் இணையிலாக் கிருபைசேர்
சரவண பவன்றன் றுண்மல ரிரண்டும்
வாழ்குக வாழ்குக மன்னிப் பொலிந்தே.

ஆசாரவிளக்கம் முடிந்தது.

சரவணபவ நின்றுமன் சரணம்.

சிவமயம்.

32

இந்நூலாசிரியரின் மாணாக்கரும் முத்துராஜ மகாஜன
சங்கத்துக் காரியதரிசியுமாகிய
க. மதுரைநாயகம் சொல்லிய துதி.

எழுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

(1) எந்தையா ரென்னையு மிளம்பிரா யத்தே யிவ்வுலகந்
தனி விருத்தி, முந்தையோ ரடைந்த முழுமுதற்
கடவுண் மொய்ம்மலர்ப் பதத்தினை முன்னி, மைந்
தனை நீதான் மங்கையர் மயலான் மாழ்கிடா துன்
றனை மாற்றத், தந்தைநேர் குருவைச் சார்குவை
யென்றே சாற்றியே விண்ணினைச் சார.

(2) வருடமோ ராறு வரையினில் வாணு டன்னைவீ
ணாக்கியே வானிற், கருடனூர்ந் தேகுங் கண்ணனே
பெரிய னென்னவுங் கமலவா சனத்தா, னருட்ர
வல்லா னல்லவ னென்று மதன்பிற கன்னவன்
றனே, கருணையா லுயிரைப் படைத்தலா லவனே
[illegible]வும் வலமுள கடவுள்.

(3) என்றுமே யுளறித் தத்தளித் திருந்தே யெந்தை
சொல் பலிதமா குமநா, வென்றுதான் வருமென்
றதனையே நாட வெழிற்குரு வாகியே யெதிர்நீ,
நன்றியான் பெறவே தோன்றினை தோன்றி இலக்
கிய மிலக்கண நல்கி, மன்றில்வா[illegible] மாமணி
யொன்றே மாசினை நீக்குவ னென[illegible]றே.

(4) சொல்லினை சோம சுந்தர குருவே சுகம்பெறத்
தகுந்ததாம் வல்ல, நல்லவா சார விளக்கமு நவின்
றுய் நாடொறு நின்னையே நயந்துக், கல்லெனு மால
விருக்கமே [illegible]யகற் கடவுளே யெனமனங் கசிந்து,
சொல்லு[illegible] பணித லன்றிவே றுண்டோ சுகம்
புகழ்[illegible] சைவார்த மரசே.

உ

பரிசோதன பத்திரம்.

		வரி	பிழை	திருத்தம்
பதிப்புரை		8	எனனும்	என்னும்
சிறப்புப்பாயிரம்		3	பெயரே	பேறே
		13	மெத்துயல்	மெத்துபல்
பக்கம்				
	4	20	மனிதரைக்	மனிதரைத்
		25	பலவிதமாகக்	பலவிதமாகப்
		29	காலினைக்	காலினைத்
	7	17	செவ்வையாய்ப்	செவ்வையாய்
		22	துணைவைச்	துணைவைத்

உ

கலைமகள் துணை

முத்துராஜ மகாஜன. சங்கம்.

ஆபீஸ்:——உறையூர், திருச்சிறுப்பள்ளி
தலைவர்:—தி. சி. பரங்கிரிவேல்
காரியதரிசி:—க. மதுரைநாயகம்
பொக்கிஷதார்:—பெ. செல்லப்பெருமாள்

நோக்கம்:—முத்துராஜ ஜாதிப்பிள்ளைகளைப் படிக்கவைத்தலும், அவர்களை ஆசாரம், நல்நடக்கை, ஈசுரபக்தி முதலிய சற்கருமங்களில் வளர்த்தலும், அவர்களுக்கு நல்ல வித்தைகளைக் கற்பித்தலுமாம்.

கிராமத்திலிருந்து வரும்பிள்ளைகளுக்கு பீ 1-க்கு ரூ. 4 விதம் சாப்பாடும் இருக்க இடமும் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அவர்களைக் காரியதரிசி மேல் பார்த்துவருவார். பிள்ளைகளின் சாப்பாட்டிற்கு ரூ. 4-க்கு மேல்கொண்ட செலவாகிறது. மேல்கொண்ட செலவைச் சங்கத்தின் பண்டிலிருந்து செல்வு செய்யப்படும். இவ்வளவு சௌகரியங்களை யோசித்துப் பிள்ளைகளைப் படிக்க அனுப்பும்படி பெற்றோர்களைக் கேட்டுக் கொள்ளுகிறோம் சங்கத்தின் போஷகர்களாகப் பிரியமுள்ளவர்கள் நன் கொடையாக ரூ. 25-க்குக் குறையாமல் கொடுத்து வருஷத்துக்கு ரூ. $\frac{1}{2}$ விதம் செலுத்தினால் ஆலோசனை மெம்பராகச் சேர்த்துக்கொள்ளப்படுவதல்லாமல் வருஷாந்தரப் பொதுக் கூட்டத்துச் சபாநாயகராகத் தெரிந்தெடுக்கப் பெறும் யோக்கியதையும் பெறுவார்கள்.

சுயஜாதியபிமானமும் ஒற்றுமையும் ஈகையும் செல்வமும் புகழும் நாகரீகமும் நன்னடக்கையும் ஒவ்வொருவருக்குள்ளும் விளங்கும்படி பரமேஸ்வரன் துணைபுரிவாராக.